Rediffusion/Edelman

Coverage Report: TCS IT Wiz – National Finals – Pondicherry

**Publication:** Maalai Thamizhgam
**Date:** 20/12/2015
**Edition:** Pondicherry
**Page No:** 3
**Headline:** St. Patrick Matric, Pondicherry finish as Runners Up at the National Finals of TCS IT Wiz 2015

# டி.சி.எஸ்., விநாடி-வினா மாணவர்கள் ஆர்வம்




புதுச்சேரி, டிச. 20-

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்திய பள்ளிகளுக்கான விநாடி–வினா நிகழ்ச்சியான டிசிஎஸ் ஐடி விஸ் இறுதிச்சுற்றில் பட்டத்திற்காக இளம் ஐடி ஆர்வலர்கள் அடங்கிய 15 குழுக்கள் ஆர்வத்துடன் பங்கேற்றன.மும்பையின் விவண்டா பை தாஜ்–ல் டிசம்பர் 12 ம் தேதி இறுதிச்சுற்று நடைபெற்றது.

இந்த ஆண்டு டிசிஎஸ் ஐடி விஸ் விநாடி வினா பிராந்திய சுற்றுகள்ஆமதாபாத், பெங்களூரு, சென்னை,கோவை, டில்லி, கொச்சி,இந்தூர்,கொல்கத்தா,மும்பை,நாக்பூர், புனே உள்ளிட்ட 15 நகரங்களில் நடைபெற்றது. இந்தியா முழுவதும் உள்ள 1806 பள்ளிகளைச்சேர்ந்த 17,000 க்கும் மேற்பட்ட 8 முதல் 12 ம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர்.15 குழுக்கள் ஏழு மற்றும் எட்டு குழுக்களாக இரண்டு சுற்று அரையுறுதியில் பங்கேற்றன.பரிசுகளை வழங்கிய டிசிஎஸ் சி.இ.ஓ மற்றும் நிர்வாக இயக்குனர் சந்திரசேகரன் ''இந்த ஆண்டு டிசிஎஸ் ஐடி விஸ் போட்டியின் தரம் மேலும் உயர்ந்திருக்கிறது. மாணவர்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்ற பட்டத்தை வெல்ல பாடுபட்டது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த திறமையை பார்க்கும் போது இந்தியாவின் ஐடி எதிர்காலம் பிரகாசமாக இருப்பதை உறுதியாக கூறலாம் என்று தெரிவித்தார். இறுதிச்சுற்றில் பங்கேற்ற 30 மாணவர்களுக்கும் டிசிஎஸ் சி.இ.ஓ மற்றும் நிர்வாக இயக்குனர் என்.சந்திரசேகரனை சந்தித்திப்பேசினர். இறுதிச்சுற்றை பிரபல வினாடி வினா மாஸ்டர் கிரி பிக்பிரைன் பாலசுப்பிரமணியன் நடத்தினார்.